(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

9 சைவசமய பாடப்பரீட்சை : 2021

தரம் ஒன்பது

nselva.com



காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஒளிப்பிழம்பின் அடியைத் தேடித் செல்ல திருமால் எடுத்த வடிவம் எது?
   1) எலி 2) பன்றி 3) பாம்பு 4) கருடன்
2. மகாபாரதத்தில் சகிப்புத் தன்மையின் சிகரமாகப் போற்றப்படுவர் யார்?
   1) பீஷ்மர் 2) குந்தி 3) தருமர் 4) கிருஷ்ணர்
3. சம்பந்தப் பெருமானுக்குத் திருமணம் நடைபெற்ற தலம் எது?
   1) திருநல்லூர் 2) சீர்காழி 3) திருவண்ணாமலை 4) தோணிபுரம்
4. யாருடைய உயிரைக் காப்பதற்காகச் சிவன் யமனைக் காலால் உதைந்தார்?
   1) மார்க்கண்டேயர் 2) திருநாவுக்கரசர் 3) கண்ணப்பர் 4) இந்திரன்
5. ஒரு திதியின் அரைப்பங்கு எதனைக் குறிக்கும்?
   1) வாரம் 2) நட்சத்திரம் 3) யோகம் 4) கரணம்
6. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர் யார்?
   1) விபுலானந்தர் 2) ஆறுமுகநாவலர்
   3) சேர். பொன் இராமநாதன் 4) கா. அருணாசலதேசிகர்
7. சைவப் புலவர் கா. அருணாசல தேசிகருக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த அவிநாசானந்த அடிகளார் வழங்கிய பட்டம் யாது?
   1) தேசிகர் 2) தேசிகமணி 3) சித்தாந்தசிகாமணி 4) சைவப்புலவர்
8. மனித வாழ்வில் 'வானபிரஸ்தம்' என்ற நிலை குறிப்பது எது?
   1) மாணவநிலை 2) இல்லற நிலை
   3) துறவுக்கு ஆயத்தமாகும் நிலை 4) துறவு நிலை
9. இறந்த தாய்க்குப் பிதிர்கடன் செய்யும் காலம் எது?
   1) ஆடி அமாவாசை 2) சித்திரா பௌர்ணமி
   3) மாசி சதுர்த்தி 4) ஆனி பிரதோஷம்
10. இந்திரன் வருணன், அக்கினி, சூரியன் மீதான துதிப்பாடல்கள் காணப்படும் வேதம் எது?
    1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வம்
11. "யாவர்க்கும் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்ற மகா வாக்கியத்தை உபதேசித்தவர் யார்?
    1) ஆறுமுகநாவலர் 2) அப்பூதியடிகள்
    3) இளையான்குடிமாறநாயணார் 4) திருமூலர்

12. பின்வரும் விரதங்களுள் பட்ச விரதத் தொகுதி எது?
1) வெள்ளிக்கிழமை, செவ்வாய்கிழமை 2) கார்த்திகை, உத்தரம்
3) சதுர்த்தி, பிரதோஷம் 4) சிவராத்திரி, நவராத்திரி

13. ஆடிப் பூரம் பின்வரும் எக்கடவுளுக்கு உகந்த விரதமாகும்?
1) சிவன் 2) திருமால் 3) அம்பிகை 4) முருகன்

14. "வாழை வெட்டு" என்ற நிகழ்வு இடம் பெறும் விரதம் எது?
1) நவராத்திரி 2. சிவராத்திரி 3) கேதாரகௌரி 4) ஆடிப்பூரம்

15. "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலைப்பாடியவர் யார்?
1) சுப்பிரமணிய பாரதியார் 2) தேசிய விநாயகம்பிள்ளை
3) சோமசுந்தர் புலவர் 4) மகாகவி உருத்திரமூர்த்தி

16. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைப் பாடியவர்கள் யாவர்?
1) நாயன்மார்கள் 2) ஆழ்வார்கள் 3) சமணத் துறவிகள் 4) ஐயப்ப பக்தர்கள்

17. "மானி" என்று அழைக்கப்பட்ட பெண் அடியாள் யார்?
1) காரைக்கால் அம்மையார் 2) மங்கையற்கரசியார்
3) ஆண்டாள் 4) கண்ணகி

18. வீதிவிடங்கப் பெருமானை நினைத்து சுந்தரர் பாடிய பதிகம் பின்வருவனற்றுள் எது?
1) ஏழிசையாய இசைப்பயனாய 2) மற்றுப் பற்று எனக்கு
3) நத்தார் படை ஞானன் 4) நீளநினைந்தடியேன்

19. இறைவனைத் தாசனாகப் பாவித்து சரியைத் தொண்டு செய்தவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரர்
3) திருநாவுக்கரசர் 4) மாணிக்கவாசகர்

20. பின்வருவோரில் கிரியை வழியில் நின்று இறைவனை வழிபடாதவர் யார்?
1) திருஞானசம்பந்தர் மூர்த்தி நாயனார் 2) சண்டேஸ்வரர் நாயனார்
3) பூசலார் நாயனார் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

21. கதிர்காமக் கந்தனின் உற்சவம் ஆடிமாதத்தில் எத்தனை நாட்கள் நடைபெறும்?
1) 10 2) 25 3) 20 4) 15

22. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று கூறியவர் யார்?
1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர் 3) இராமகிருஷ்ணர் 4) விவேகானந்தர்

23. "எவ்வுயிரும் என்னுயிர் போல எண்ணி இரங்க தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே" எனப் பாடியவர் யார்?
1) தாயுமானர் 2) ஞானப்பிராகசர் 3) நாதமுனிவர் 4) ஔவையார்

24. திருச்சதகம் என்ற பிரபந்தம் பின்வருவனவற்றுள் எதனுள் அடங்கும்?
1) திருப்பல்லாண்டு 2) பெரியபுராணம் 3) திருவாசகம் 4) திருவிசைப்பா

25. பின்வருவனவற்றுள் 9ம் திருமுறைக்குள் அடங்குபவை எவை?
1) திருப்பல்லாண்டு, திருவாசகம் 2) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
3) திருவாசகம், பெரியப்புராணம் 4) திருவிசைப்பா, திருவாசகம்

26. ஈழத்துச் சிதம்பரம் என்ற ஆலயம் இலங்கையில் எங்கு அமைந்துள்ளது?
1) யாழ்ப்பாணக் குடா நாட்டின் காரைநகர்ப் பகுதி.
2) கொழும்பு கொச்சிக்கடைப் பகுதி.
3) மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி.
4) மத்திய மாகாணத்தின் மாத்தளை மாநகரில்.

27. "ஜனநாத மங்கலம்" என ஈழமண்டலத்திற்குப் பெயரிட்டவர் யார்?

1) சேரர் 2) பாண்டியர் 3) பல்லவர் 4) சோழர்

28. சைவ சமய பண்டிகைகளுள் அடங்காதது எது?

1) தைப்பொங்கல் 2) விளக்கீடு 3) தீபாவளி 4) புத்தாண்டு

29 - 30 வரையான கேள்விகளும் அட்டவணையை அடிப்படையாக கொண்டு சரியான விடையைத் தெரிக?

("அ" பகுதிக்கு பொருத்தமான "ஆ" பகுதிக்குரிய எழுத்துக்கள்
சரியான இணைப்பை தெரிவு செய்க)

நாட்டார் தெய்வம் (அ)	நிகழ்வு (ஆ)
A) ஐயனார்	D) சலவைத் தொழிலாளியால் காப்பாற்றப்பட்டவர்
B) காத்தவராயன்	E) சிவனுக்கும் திருமாலுக்கும் மகனாக பிறந்தார்
C) பெரிய தம்பிரான்	F) உமாதேவியாரின் தவத்தை காக்க அவதரித்தார்

29. வீரப்பத்திரனின் கோபத்திற்கு உள்ளானவர் பற்றிய சரியான இணைப்பு

1) CD 2) AF 3) BF 4) CE

30. தார்கா வனத்து முனிவரின் ஆணவத்தை அடக்க உதித்தவர் பற்றிய சரியான இணைப்பு?

1) AE 2) AF 3) CE 4) BD

(30x1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலவராக வழிப்படப்படுவது எது?
2. பஞ்சரதங்கள் பவனி வரும் இரண்டு ஆலயங்களைத் தருக?
3. திருத்தொண்டர் புராணத்தின் முதல் நூலும் வழிநூலும் எது?
4. பதவியாவில் அமைந்துள்ள சிவாலயம் எது?
5. ஆன்மாவுக்கு நல்லுணர்வு வராமல் தடுத்துக் கொண்டிருப்பது எது?
6. எப்படி இருந்து செபித்தல் ஆகாது என்பதற்கு இரண்டு முறைகளைத் தருக?
7. தமிழ் வேதம் ஓதுவதற்குப் பொருத்தமானவர் யாவர்?
8. அதிகரிச்சன விரதம் என்பதனால் விளக்குவது யாது?
9. பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானம் யாது?
10. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தினைத் தொகுத்தவர் யார்?
11. கதிர்காமத்துப் பாதயாத்திரை மேற்கொண்ட ஈழத்து சித்தர்கள் இருவர் பெயர்களைத் தருக? **(11** புள்ளிகள்**)**
12. பின்வரும் சிவபுராணத்தில் அடுத்து வரும் நான்கு அடிகளை மட்டும் எழுதுக.

சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

.....

.....

.....

.....

(4 புள்ளிகள்**)**

பகுதி - III

1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "மங்கையர்க்கரசி வளவர்கோன்....." 2. "இல்லக விளக்கது ....."
3. "நையாத மனத்தினனை ....." 4. "காதலாகித் கசிந்து ....."

(2x7 =14 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

1. "எனைத் துணைய ராயினும் ....."
2. "ஒழுக்கத்தினொல்கார்....."
3. "எல்லார்க்கும் நன்றாம்....."
4. "கெடுவாக வையாது ....."
5. "மறவற்க மாசற்றார் ....."
6. "பணிவுடையன் இன்சொலன் ....."

(1x5 = 5 புள்ளிகள்**)**

பகுதி - IV

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. மனித விழுமியங்கள் மூன்று தருக?
2. சகிப்புத்தன்மையை விளக்கும் வள்ளுவரின் குறள் ஒன்று தருக?
3. சகிப்புத்தன்மையை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம் என்பதை விளக்குக?

(9 புள்ளிகள்**)**

2. 1. வருட விரதம் இரண்டிற்கு உதாரணம் தருக?
2. நவராத்திரி விரதத்தில் இடம்பெறும் இரண்டு முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக?
3. கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கும் முறையைச் சுருக்கமாகக் குறிப்பிடுக?

(9 புள்ளிகள்**)**

3. 1. முதல் ஆழ்வார்கள் என்று குறிப்பிடுபவர்களின் பெயர்களைத் தருக?
2. ஆண்டாள் பாடிய இரண்டு பிரபந்தங்களைத் தருக?
3. நம்மாழ்வாரின் சிறப்பு யாது? இவரைத் தெய்வமாக வழிப்பட்ட ஆழ்வார் யார்?

(9 புள்ளிகள்**)**

4. 1. தலயாத்திரையைப் பாதயாத்திரை என அழைக்கப்படுவதன் காரணம் யாது?
2. தலயாத்திரை மேற்கொள்ளக்கூடிய இந்தியத்திருத்தலங்கள் மூன்று தருக?
3. கதிர்காமப் பாதயாத்திரையின் போது அவர்கள் தங்கிச் செல்லும் பிரதான முருகன் ஆலயங்கள் நான்கினைத் தருக?

(9 புள்ளிகள்**)**

5. எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?

1. சன்மார்க்கம்
2. நாட்டார் வழிபாடு
3. சைவசித்தாந்தத்தில் பாசம்
4. ஆடிப்பிறப்பு
5. கா. அருணாசலதேசிகர்
6. பெரிய போரதீவு பத்திரகாளி அம்மன் ஆலயம் **(9** புள்ளிகள்**)**